

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.2.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெற்ற பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (JAMBOREE) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நிறைவு விழாவில், கலந்துகொண்டுள்ள சாரண சாரணியர்களுடன் செல்ஃபி புகைப்படம் எடுத்துக்கொண்டார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.2.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெற்ற பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (JAMBOREE) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நிறைவு விழாவில், ”மையெழுத்து இயக்கம் திரையில் ”சாரணியம் வாழ்க! என்று எழுதி, கையொப்பமிட்டார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாநில ஜம்போரி தலைவரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள் பி. அப்துல் சமது, எம். பழனியாண்டி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார், இ.ஆ.ப., தலைமை ஆணையர் டாக்டர் கே.கே. காந்தேல்வால், மாநில முதன்மை ஆணையர் டாக்டர் ஜி. அறிவொளி, உத்தர பிரதேச மாநில முதன்மை ஆணையர் பிரபாத் குமார், முதன்மை ஆணையர் எஸ்.கே.பிஷ்வாஸ், ஆசிய பசிபிக் மண்டல துணை தலைவர் பிரார்தனா, டேவிட் பேடன் பவல், சாரண, சாரணியர் இயக்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க.
# இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்
## புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு | மங்கையர்கரசி திருமண மண்டபம், வடலூர், கடலூர். |
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.2.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெற்ற பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (JAMBOREE) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி நிறைவு விழாவில், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழா சிறப்பு மலரினை வெளியிட்டார். இந்த விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாநில ஜம்போரி தலைவரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள் பி.அப்துல் சமது, எம். பழனியாண்டி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், பள்ளிக் கல்வித் துறை செயலாளர் திருமதி எஸ்.மதுமதி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார், தலைமை ஆணையர் டாக்டர் கே.கே.காந்தேல்வால், மாநில முதன்மை ஆணையர் டாக்டர் ஜி.அறிவொளி, உத்தர பிரதேச மாநில முதன்மை ஆணையர் பிரபாத் குமார், முதன்மை ஆணையர் எஸ்.கே.பிஷ்வாஸ், ஆசிய பசபிக் மண்டல துணை தலைவர் பிரார்தனா, டேவிட் பேடன் பவல், சாரண, சாரணியர் இயக்க நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.2.2025) திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.






திருச்சியில் பேரறிஞர் அண்ணாவின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு சத்திரம் பேருந்து நிலையத்திலும்,கலைஞர் அறிவாலயத்திலும் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு , பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் பெரியசாமி, கே.என்.சேகரன், நன்னியூர் ராஜேந்திரன், வழக்கறிஞர் பாஸ்கர், டோல்கேட் சுப்பிரமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ், கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன் மற்றும் கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, கழக நிர்வாகிகள், கலைச்செல்வி குமரவேல், ராமதாஸ் பி.ஆர்.பாலசுப்ரமணியன் புஷ்பராஜ், ஸ்ரீனிவாச பெருமாள், துபேல் அஹமத் கருத்து கதிரேசன் வா மடம் சுரேஷ் , கருமண்டபம் சுரேஷ் பரமசிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி நகராட்சி மந்தைவெளி திடலில் உள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினர்.